தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

19.12.2012 P.M

20.12.2012 A.M

## செதில் பரு முறையில் கரும்பு நாற்று உற்பத்தி



செதில் பரு கரும்பு நாற்று நடும் முறையில் இரட்டிப்பு லாபம் கிடைப்பதால் விழுப்புரம் மாவட்டத்தில் இம்முறையில் கரும்பு சாகுபடி மேற்கொள்ள விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

விழுப்புரம் மாவட்டத்தில் விழுப்புரம் அருகே கந்தமங்கலம், பிடாகம், விராட்டிகுப்பம், விக்கிரவாண்டி,செஞ்சி, கள்ளக்குறிச்சி, சின்னசேலம், திருக்கோவிலூர் உள்ளிட்ட பகுதிகளில் 1 லட்சம் ஹெக்டேர் வரை கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது.

விழுப்புரம், புதுச்சேரியில் உள்ள 9 சர்க்கரை ஆலைகளுக்கு விழுப்புரம் மாவட்டத்தில் இருந்து கரும்பு அரவைக்கு பயன்படுத்தப்படுகிறது. முன்பு கரணை நடவு முறையில் அரையடி நீளமுள்ள கரணைகளை நடவு செய்து கரும்பு உற்பத்தி செய்யும் முறை மேற்கொள்ளப்பட்டது.

இதில் 10 மாதத்தில் அறுவடை செய்யும் போது, ஏக்கருக்கு 30 முதல் 45 டன் கிடைப்பதே அரிதாக இருந்தது. ஏக்கருக்கு 30 ஆயிரம் கரணைகள் வரை நடவு செய்ய வேண்டி இருந்ததால் செலவு அதிகம் ஏற்பட்டது. இதனால், விழுப்புரம் மாவட்டத்தில் செதில் பரு முறையில் கரும்பு சாகுபடி முறைக்கு கரும்பு விவசாயிகள் மாறி வருகின்றனர். 1 லட்சம் ஹெக்டேரில் 10 முதல் 20 சதவீதம் வரை விவசாயிகள் செதில் பரு முறைக்கு மாறியுள்ளனர்.

இம்முறையில் கரும்பில் ஒரு பரு மட்டும் எடுக்கப்பட்டு, விதை நேர்த்தி செய்யப்படுகிறது. பின்னர் 50 குழிகள் உள்ள டிரேயில் மக்கிய நார் கழிவில் ஒரு பரு கரணை நடவு செய்யப்படுகிறது.

டிரேயில் காற்று புகுந்து விடாத வகையில் 5 நாள்கள் பாலிதீன் விரிப்பு மூலம் முடி வைத்து மூடாப்பு போடப்படுகிறது. 5 நாளில் முளைப்புத் திறன் வந்ததும், ஷெட்டில் வைத்து நீர் தெளிப்பான் மூலம் நீர் தெளித்து வளர்க்கப்படுகிறது.

15 நாளில் ஒன்றரை அடி வரை நாற்று வளர்ந்த பின்னர் ஷெட்டிலிருந்து வெளியே எடுத்து வைத்து வளர்க்கப்படுகிறது. 30 நாள்களில் நாற்று 2 அடி உயரம் வரை வளர்ந்ததும் விவசாயிகளுக்கு நாற்று நடவுக்கு வழங்கப்படுகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் சர்க்கரை ஆலை நிர்வாகங்களே 14 விவசாயிகளிடம் ஒரு பரு செதில் நாற்று உற்பத்தி செய்ய ரூ.1 வழங்குகிறது. 30 நாள் பருவத்தில் உற்பத்தி செய்யப்பட்ட நாற்றுக்களை விவசாயிகளுக்கு ரூ.1.25-க்கு வழங்குகிறது.

ஒரு ஏக்கருக்கு 2 அடிக்கு ஓரு நாற்று வீதம் 5,000 முதல் 5,500 நாற்றுகள் வரை நடவு செய்யலாம். நடவு செய்யும்போது தண்ணீர் பாய்ச்சிய வயலில் 1 கிராம் டி.ஏ.பி-யுடன், அரை கிராம் குருணை கலந்து நடவு செய்ய வேண்டும்.

நடவு செய்த 20-வது நாளில் நாற்றில் இருந்து கிளை வரத் தொடங்கும். அப்போது முதலில் வளர்ந்த ஒருபரு செதில் நாற்றை வெட்டி விட்டால் மேலும் அதிக நாற்றுகள் வளரும்.

தொடர்ந்து முறையாகப் பராமரித்தால், ஏக்கருக்கு குறைந்தது 80 முதல் 106 டன் வரை கரும்பு உற்பத்தியாகிறது. இதன் மூலம் விவசாயிகளுக்கு இரட்டிப்பு லாபம் கிடைக்கிறது. இம்முறையில் உற்பத்தியாகும் கரும்பு ஒவ்வொரு கணுவுக்கும் அதிக இடைவெளி இருப்பதுடன் திரட்சியாகவும் காணப்படுகிறது.

இம்முறையில் பேரங்கியூரைச் சேர்ந்த விவசாயி பூராசாமி, ஏக்கருக்கு 106 டன் உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளார். கோவை வேளாண் பல்கலைக்கழகம் இவருக்கு விருது வழங்க பரிந்துரை செய்துள்ளது. இதேபோல் பிடாகத்தைச் சேர்ந்த என்.எஸ். தண்டபாணியும் நடவு செய்து அறுவடை செய்ய உள்ளார். இது குறித்து வேளாண் இணை இயக்குநர் சேகர் கூறுகையில், விழுப்புரம் மாவட்டத்தில் ஒருபரு செதில் முறையில் கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஆலைகளின் மூலம் 50 சதவீதம் வரை மானியம் வழங்கப்படுகிறது.

அதிக உற்பத்தியுடன், குறைந்த செலவில் அதிக லாபம் கிடைப்பதால் 20 சதவீத விவசாயிகள் ஒரு பரு செதில் முறைக்கு மாறி வருகின்றனர் என்றார்.

### முன்னோடி விவசாயிகளுக்கு தென்னை மரம் ஏறும் பயிற்சி

காமாட்சிபுரத்தில் சென்டெக்ட் வேளாண்மை அறிவியல் மையம், தென்னை வளர்ச்சி வாரியம் ஆகியவற்றின் சார்பில், சின்னமனூரைச் சேர்ந்த முன்னோடி விவசாயிகளுக்கு கருவியைப் பயன்படுத்தி தென்னை மரம் ஏறும் பயிற்சி நடைபெற்று வருகிறது.

இப்பயிற்சி முகாமை, மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ஜி. சுந்தரம் தலைமையில், சென்டெக்ட் வேளாண்மை மைய தலைவர் பச்சைமால் தொடங்கி வைத்தார். காமாட்சிபுரம், சீப்பாலகோட்டை, ஏரசக்கநாயக்கனூர், கம்பம், புதுப்பட்டி, எல்லப்பட்டி, ஓடைப்பட்டி, கன்னிசேர்வைபட்டி, மூர்த்திநாயக்கன்பட்டி, பண்ணைப்புரம், மல்லிங்காபுரம், சிலைமலை, தர்மாபுரி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் பயிற்சியில் கலந்துகொண்டனர். பயிற்சி பெற்ற முன்னோடி விவசாயிகளுக்கு, தென்னை மரம் ஏறும் கருவி இலவசமாக வழங்கப்பட்டது.

இப்பயிற்சியானது, டிச. 22-ம் தேதி வரை நடைபெறுகிறது. வைகை அணை வேளாண்மை ஆராய்ச்சி நிலையத் தலைவர் பாலகிருஷ்ணன், வேளாண்மை வணிக துணை இயக்குநர் ரங்கநாதன், நபார்டு வங்கிப் பொது மேலாளர் மணி, தென்னை வளர்ச்சி வாரிய கள அலுவலர் பரமசிவம், மாவட்ட விவசாயிகள் சங்க செயலர் பாண்டியன், கம்பம் பள்ளத்தாக்கு தென்னை விவசாயிகள் சங்கச் செயலர் அப்பாஸ், துரைச்சாமிபுரம் விவசாயிகள் சங்கத் தலைவர் பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். சென்டெக்ட் மைய தொழில்நுட்ப வல்லுநர்கள் மாரிமுத்து, கயல்விழி, பொள்ளாச்சியைச் சேர்ந்த பயிற்றுநர்கள் பரமேஸ்வரன், ராஜேந்திரன் ஆகியோர் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்து வருகின்றனர்.

### அட்மா திட்டம் : திருந்திய நெல் சாகுபடி பயிற்ச

ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டார அட்மா திட்ட விவசாயிகளுக்கு திருத்திய நெல் சாகுபடி முறையில், நெல் உற்பத்தி திறனை அதிகரிக்கக் கூடிய தொழில்நுட்ப பயிற்சி வேளாண்மை உதவி இயக்குநர் கே.ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. பயிற்சியைத் தொடங்கி வைத்து அவர் கூறியதாவது:

திருந்திய நெல் சாகுபடி முறையில் கடைப்பிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்களான சான்று விதை பயன்படுத்துதல், மேட்டு பாத்தி, பாய் நாற்றங்கால் அமைத்தல், ஒற்றை நாற்று நடவு முறை, மார்க்கர் கருவி மூலம் நடவு செய்தல், கோனோ வீடர் களைக் கருவி உருட்டுதல், இலை வண்ண அட்டையைப் பயன்படுத்தி மேலுரமிடுதல் ஆகியவை குறித்து விளக்கினார்.

மேலும் விவசாயிகளுக்கு பாய் நாற்றங்கால் அமைத்தல் மற்றும் ஏக்கருக்கு 4000 கிலோ மகசூல் எடுப்பதற்கான உத்திகள் மற்றும் தேவைக்கேற்ற பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்தும் விளக்கப்பட்டது.

பயிற்சி ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாரத்தில் உள்ள முன்னோடி விவசாயிகளுக்கு அட்மா திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது. வட்டார தொழில்நுட்ப மேலாளர் சு.லதா நன்றி கூறினார்.

பயறு சாகுபடி பயிற்சி: ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டார அட்மா திட்ட விவசாயிகளுக்கு,

பயறு வகைகளில் உற்பத்தித் திறனை அதிகரிக்கக் கூடிய தொழில்நுட்பப் பயிற்சி

வேளாண்மை உதவி இயக்குநர் கே.ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது.

பயிற்சி அளித்த பேராசிரியர் ராமலிங்கம், உதவி பேராசிரியர் ஞானசேகரன் ஆகியோர் கூறுகையில், பயறு சாகுபடி செய்த விவசாயிகளுக்கு திருந்திய பயறு சாகுபடி

முறையில் உயிர் உரம் உபயோகித்தல், ஒருங்கிணைந்த உர மேலாண்மை, இலை வழியாக 2 சதவீதம் டி.ஏ.பி. கரைசல் தெளித்தல், காய்ப்புழுக்களை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் போன்றவற்றை எடுத்துரைத்தனர்.

ஏற்பாடுகளை தொழில்நுட்ப வல்லுநர்கள் க.பெருமாள்சாமி, ம.தெய்வேந்திரன் ஆகியோர் செய்திருந்தனர். பயிற்சியில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

### விவசாயிகளுக்கு ரூ.12.50 லட்சம் உரங்கள் அளிப்பு

கொல்லிமலை விவசாயிகளுக்கு ரூ.12.50 லட்சம் மதிப்பிலான பீன்ஸ் விதை, உரங்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

தோட்டக்கலைத் துறையின் மானாவாரி நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு விதை, உரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

கொல்லிமலை ஊராட்சி ஒன்றியத்துக்கு உள்பட்ட 50 ஹெக்டர் விளைநிலங்களில் பயிரப்பட்டுள்ள மரவள்ளி பயிரில் ஊடுபயிராக பீன்ஸ் விதை நடவு செய்ய 100 விவசாயிகளுக்கு மொத்தம் ரூ.12.50 லட்சம் மதிப்பிலான விதை, உரங்கள் புதன்கிழமை வழங்கப்பட்டன.

விதை, உரங்களை கொல்லிமலை ஊராட்சி ஒன்றியத் தலைவர் சி.சந்திரசேகரன் விவசாயிகளுக்கு வழங்கினார்.

நிகழ்ச்சியில் ஊராட்சி மன்றத் தலைவர் ராஜ்குமார், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் சின்னதுரை, சிவப்பிரகாசம், சித்ரா, வேளாண்மை உதவி இயக்குநர் செப்ந்திரராஜன், தோட்டக்கலை துணை அலுவலர் கே.வைத்தியலிங்கம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

19th dec 2012 P.M

**விதை ஆய்வு துணை இயக்குநர் எச்சரிக்கை**

சேலம், நாமக்கல் மாவட்டங்களில் உரிமம் பெறாமல் நர்சரி அமைத்து செடிகள் விற்பனை செய்பவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று சேலம் விதை ஆய்வு துணை இயக்குநர் ப.செளந்திரராஜன் எச்சரித்துள்ளார்.

சேலம், நாமக்கல் மாவட்டங்களில் நகரப் பகுதிகளிலும், கிராமப்புறங்களிலும் தனியார் நர்சரிகள் அமைக்கப்பட்டு விவசாயிகளுக்கும் பொதுமக்களுக்கும் தேவைப்படும் பல்வேறு விதமான பூச்செடிகள், பழச்செடிகள், மரக்கன்றுகள் போன்றவற்றை உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகின்றனர்.

மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ளபடி விதைகள், ஒட்டுகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் அனைத்து செடிகளும் விதைச் சட்டத்துக்கு உட்படுவதால் உரிமம் பெற்றே விற்பனை செய்யப்பட வேண்டும். எனவே நர்சரி அமைத்துள்ளவர்கள், அமைக்க இருப்பவர்கள் அனைவரும் விற்பனை உரிமம் பெறுவதற்கான விண்ணப்பப் படிவமான அ-வில் 2 நகல்களை பூர்த்தி செய்து ரூ.50 கட்டணத்தை உரிய கணக்குத் தலைப்பில் கருவூலத்திலோ, பாரத ஸ்டேட் வங்கியிலோ செலுத்தி, அதற்கான செலுத்துச் சீட்டு, நர்சரி அமைந்துள்ள கட்டடத்தின் வரைபடம், சொந்த கட்டடமாக இருந்தால் வரி ரசீது நகல், கட்டட வரி ரசீது நகல் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

சேலம், நாமக்கல் மாவட்டங்களில் நர்சரி அமைத்துள்ளவர்கள் மேற்படி விண்ணப்பத்தை சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 4-வது மாடியில் அறை எண் 402-ல் செயல்படும் விதை ஆய்வு துணை இயக்குநர் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

உரிமம் பெறாமல் நர்சரி வைத்திருப்பவர்கள் உடனடியாக விண்ணப்பிக்க வேண்டும் என்றும், இல்லாவிட்டால் விதை (கட்டுப்பாடு) ஆணை 1983-ன் படி சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் செளந்திரராஜன் எச்சரித்துள்ளார்.

**மின்வெட்டால் விவசாயம் கடும் பாதிப்பு : எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**

மின்வெட்டைக் கண்டித்து, கடலூர் மாவட்டத்தில் திமுக சார்பில் பண்ருட்டி, சிதம்பரம், கடலூர், விருத்தாசலம் உள்ளிட்ட இடங்களில் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் நடந்தது.

÷சிதம்பரம் காந்திசிலை அருகே நகர திமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம், நகரச் செயலர் கே.ஆர்.செந்தில்குமார் தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

÷ஆர்ப்பாட்டத்தில், முன்னாள் அமைச்சரும், மாவட்டச் செயலருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேசியது:

÷தேர்தல் நேரத்தில் தடையில்லா மின்சாரம் வழங்கப்படும் என ஜெயலலிதா பொய்யான வாக்குறுதியை அளித்தார். அதை நம்பி வாக்களித்த மக்கள் தற்போது கடும் மின்வெட்டினால் அவதியுற்று வரும் நிலை உள்ளது.

÷திமுக ஆட்சியில் 2 மணி நேரம்தான் மின்வெட்டு செய்யப்பட்டது. தற்போது 16 மணி நேரம் மின்வெட்டு செய்யப்படுகிறது. மின்வெட்டினால் அரிசி பஞ்சம் ஏற்படும் நிலை உள்ளது.

÷வைக்கோல் கிடைக்காமல் கால்நடைகள் அவதிக்குள்ளாகியுள்ளன.

÷திருப்பூரில் நெசவுத் தொழில் உள்ளிட்ட அனைத்துத் தொழில்களும் முடங்கிப் போய் வேலைவாய்ப்பின்றி இளைஞர்கள் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

÷நீரின்றி விவசாயம் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இவைகளை சரி செய்ய முடியாத ஜெயலலிதா மத்திய அரசை குறை கூறி வருகிறார் என எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

÷ஆர்ப்பாட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர் கீரை.வீரமணி, முன்னாள் எம்எல்ஏக்கள் துரை.கி.சரவணன், மருதூர் ராமலிங்கம், நகர அவைத் தலைவர் தென்னவன் ஆறுமுகம், குமராட்சி ஒன்றியச் செயலர் ரா.மாமல்லன், கீரப்பாளையம் ஒன்றியச் செயலர் பூபாலன், மாவட்டப் பிரதிநிதிகள் மாயா மச்சேந்திரன், ராஜேந்திரன், நகரமன்ற உறுப்பினர்கள் ரா.வெங்கடேசன், அப்புசந்திரசேகரன், கோ.நடராஜன், ஏ.ஆர்.சி.மணிகண்டன், சி.வி.வெங்கடேசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கடலூரில்...

கடலூர், டிச. 18: கடலூர் ஆட்சியர் அலுவலகம் எதிரே நடந்த ஆர்ப்பாட்டத்துக்கு, கட்சியின் மாநில மாணவரணிச் செயலர் இள.புகழேந்தி தலைமை வகித்தார். நகரச் செயலர் து.தங்கராசு, முன்னாள் நகர்மன்றத் தலைவர் ஏ.ஜி.ராஜேந்திரன், இளைஞரணி துணைச்செயலர் ஏ.ஜி.ஆர்.சுந்தர் உள்ளிட்டோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

பண்ருட்டியில்...

பண்ருட்டி, டிச. 18: பண்ருட்டி நகர கழகம் சார்பில் பண்ருட்டி பஸ் நிலையம் அருகே நடந்த ஆர்ப்பாட்டத்துக்கு, முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் டாக்டர் நந்தகோபாலகிருஷ்ணன் தலைமை தாங்கினார்.

÷நகரச் செயலர் ராஜேந்திரன், இளைஞரணி அமைப்பாளர் தமிழ்செல்வன், முன்னாள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தணிகைசெல்வம், நகர பொருளர் ஆர்.கே.ராமலிங்கம், துணைச் செயலர் சையத்காதர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

÷பண்ருட்டி ஒன்றிய திமுக சார்பில் காடாம்புலியூர் பஸ் நிறுத்தம் அருகே அறப்போர் ஆர்ப்பாட்டம் நடந்தது.

÷முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினரும், பண்ருட்டி ஒன்றியச் செயலருமான சபா.இராஜேந்திரன் தலைமை தாங்கினார். அவைத் தலைவர் புலவர் த.நாராயணசாமி, மாவட்ட இலக்கிய அணி செயலர் அகரம் நாராயணசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விருத்தாசலத்தில்...

விருத்தாசலம், டிச. 18: விருத்தாசலம் பாலக்கரை திலீபன் சதுக்கத்தில் நகர திமுக சார்பில் நடந்த ஆர்ப்பாட்டத்துக்கு, சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினரும், தீர்மானக் குழுச் செயலருமான குழந்தை.தமிழரசன் தலைமை ஏற்றார்.

÷நகரச் செயலர் க.தண்டபாணி கண்டன உரையாற்றினார். பொதுக் குழு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட துணைச் செயலர் குரு சரஸ்வதி, நகர அவைத் தலைவர் அபுபக்கர், தொமுச மாநில துணைச் செயலர் விஸ்வநாதன், நகர்மன்ற உறுப்பினர்கள் ராமு, த.அன்பழகன், நகர இளைஞரணி அமைப்பாளர் செல்வ.கணேஷ்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### டிசம்பர் 21-ல் விவசாயிகள் குறைதீர்வுக் கூட்டம்

விழுப்புரத்தில் டிசம்பர் 21-ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சியர் வா. சம்பத் தெரிவித்தார்.

÷அவரது அறிக்கை: டிசம்பர் மாதத்துக்கான விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம் 21-ம் தேதி மாவட்ட ஆட்சியர் கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. இதில் மாவட்டத்திலுள்ள விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளும், விவசாயிகளும் பங்கேற்று பயன் பெறலாம் எனக் கூறியுள்ளார்.

### சாயக்கழிவால் பாதிக்கப்பட விவசாயம் தொடர்பாக அனைத்து விவசாய சங்கங்கள் ஆலோசனைக் கூட்டம்

கரூரில் சாயக் கழிவால் பாதிக்கப்பட்ட விவசாயம் தொடர்பாக அனைத்து விவசாய சங்கங்கள் சார்பில் டிச. 20-ம் தேதி ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

கரூர் சின்ன கொங்கு திருமண மண்டபத்தில் நடைபெறும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கரூரில் விவசாயத்தை அழிக்கும் வகையில் சட்டத்துக்கு புறம்பாக இயங்கும் சாய ஆலைகள், அமராவதி ஆற்றில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் கடைமடை விவசாயிகளுக்கு வழங்குவதில் உள்ள பாகுபாடு, பழைய ஆயக்கட்டு உரிமைகள் பறிக்கப்படுவது.

தனியார்மயம், தாராளமயம், உலகமயம் ஆகியவற்றுக்கு அளிக்கப்படும் முன்னுரிமையை 70 சதத்துக்கும் அதிகமுள்ள விவசாயத் துறைக்கு அளிக்க மறுப்பது. காவிரி, அமராவதி ஆற்றில் நீதிமன்ற உத்தரவை மதிக்காமல் நடைபெறும மணல் கொள்ளை. சாயக்கழிவால் பாதிக்கப்பட்ட

விவசாயிகளுக்கு, 2004-ம் ஆண்டு இழப்பீட்டு ஆணையம் பரிந்துரைத்த இழப்பீடு வழங்கப்படாதது உள்ளிட்டவைகள் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளன.

### டிச. 28-ல் நாகை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம்

நாகை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், நாகை மாவட்ட ஆட்சியரகத்தில் டிச. 28-ம் தேதி காலை 11 மணிக்கு நடைபெறுகிறது.

முன்னோடி விவசாயிகள், விவசாய சங்கங்களின் நிர்வாகிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்று, வேளாண் தேவைகள் மற்றும் கருத்துகளைத் தெரிவிக்குமாறு மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி தனது செய்திக் குறிப்பில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### பவானிசாகர் அணை நீர்மட்டம் 43.92 அடி

பவானிசாகர் அணை நீர்மட்டம் இன்று காலை நிலவரப்படி 43.92 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி.

அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 112 கன அடியாக இருந்தது.

அணையிலிருந்து ஆற்றில் விநாடிக்கு 650 கனஅடி தண்ணீரும், வாய்க்காலில் 1800 கனஅடி தண்ணீரும் திறந்து விடப்பட்டுள்ளது. அணையின் நீர் இருப்பு 3.14 டி.எம்.சி.

இன்றைய வேளாண் செய்திகள்

20.12.2012 A.M

## ஏல விற்பனையில் பருத்தி வரத்து அதிகரிப்பு



அன்னூரில் வாராந்திர ஏலத்தில், பருத்தி வரத்தும், விலையும் அதிகரித்தது.

அன்னூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில், இந்த சீசனுக்கான வாராந்திர பருத்தி ஏலம் கடந்த 27ம் தேதி துவங்கியது. முதல் மூன்று வாரங்களில் பருத்தி வரத்து மிகவும் குறைவாகவே இருந்தது. இந்த வாரம் பருத்தி வரத்தும் அதிகரித்து, விலையும் அதிகரித்தது. 335 மூட்டை பருத்தியை, 56 விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். "போல்காட்' ரக பருத்தி, ஒரு குவிண்டால் குறைந்தபட்சமாக 4,400 ரூபாய் முதல் முதல் 4,630 ரூபாய் வரை விற்றது. கடந்த வாரத்தை விட ஒரு குவிண்டாலுக்கு 150 ரூபாய் விலை கூடியுள்ளது. இத்தகவலை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் ரமேஷ்குமார் தெரிவித்தார்.

## ஒட்டன்சத்திரத்தில் வெங்காயம் விலை சரிவு



ஒட்டன்சத்திரம்:ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தையில், வரத்து அதிகரித்து உள்ளதால், கிலோ ரூ.52க்கு விற்ற சின்ன வெங்காயம் விலை வீழ்ச்சி அடைந்து ரூ.37க்கு விற்றது.

ஒட்டன்சத்திரத்தில் கடந்த சில வாரங்களாக, வரத்து குறைவு காரணமாக, சின்ன வெங்காயத்தின் விலை ஏறுமுகமாக இருந்து வந்தது. கிலோ அதிகபட்சமாக ரூ.52 வரை விற்றது.

பற்றாக்குறையை சமாளிக்க கர்நாடக மாநிலத்தில் இருந்து வெங்காயம் தருவிக்கப்பட்டு கிலோ ரூ.21 வரை விற்பனை செய்யப்பட்டது. இந்நிலையில் புதிதாக பறிக்கப்பட்ட சின்ன வெங்காயம் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வரத் தொடங்கியது. வரத்து தொடர்ந்து அதிகரித்து வந்ததால் விலை இறங்குமுகமாக உள்ளது. வெங்காயத்தின் நேற்றைய குறைந்த பட்ச விலை ரூ.37 ஆக இருந்தது.

கமிஷன் கடை உரிமையாளர் செல்வம் கூறுகையில், ""ஒட்டன்சத்திரத்தில் உள்ள கிராமப் பகுதிகளில் இருந்து உள்ளூர் வெங்காயம் அறுவடை செய்யப்படுகிறது. இதன்காரணமாக வரத்து அதிகரித்துள்ளதால் விலை குறைந்துள்ளது,'' என்றார்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

20.12.2012 A.M

## மஞ்சள் விலை ஏறுமுகம் குவிண்டால் ரூ.6295



ஈரோடு : ஈரோட்டில் ஒழுங்குமுறை விற்பனை கூடம் மற்றும் வெளிமார்க்கெட்டில் மஞ்சள் விற்பனை நடைபெறுகிறது. சில நாட்களாக மஞ்சள் விலை குவிண்டாலுக்கு 200 முதல் 400 ரூபாய் வரை உயர்ந்தது.

நேற்று முன்தினம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ஒரு குவிண்டால் விரலி மஞ்சள் ரூ.6,021 வரையும், கிழங்கு மஞ்சள் ரூ.5,439 வரையும், வெளிமார்க்கெட்டில் விரலி மஞ்சள் ரூ.3,899 முதல் ரூ.5,811 வரையும், கிழங்கு மஞ்சள் ரூ.3,696 முதல் ரூ.5,319 வரையும் விற்றது. நேற்று, ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விரலி விலை ரூ.4,809 முதல் ரூ.6,295 வரையும், கிழங்கு விலை ரூ.4,699 முதல் ரூ.5,593 வரையும் இருந்தது. பொங்கல் பண்டிகை நெருங்குவதால் மஞ்சள் விலை இன்னும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது.

## புள்ளம்பாடி ஒன்றியத்தில் வறட்சியில் பயிரை காக்கும் நடமாடும் நுண்தெளிப்பான் விவசாயிகளுக்கு செயல்விளக்கம்

லால்குடி, : புள்ளம் பாடி ஒன்றியத்தில் வறட்சி யில் பயிரை காக்கும் நட மாடும் நுண்தெளிப்பான் குறித்து விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரிகள் செயல்விளக்கம் அளித்தனர்.

திருச்சி மாவட்டம் லால்குடி தாலுகா புள்ளம் பாடி ஒன்றியம் இ.வெள்ள னூர் பகுதியிலுள்ள வயல்களில் பயிர்கள் வறட்சியை தாங்கி வளர்வதற்கு பல் வேறு செயல்முறைகள் விளக்க முகாம்

சிறுகமணி வேளாண்மை அறிவியல் மற்றும் கரும்பு ஆராய்ச்சி நிலையம் சார்பில் நடைபெற்றது. முகாமிற்கு வேளாண்மைதுறை துணை இயக்குனர் பொன்னுசாமி தலைமை வகித்து தொழில்நுட்ப விளக்கங்களை கூறி னார். ஊராட்சித்தலைவர் சமுத்திரமுத்து கருணாக ரன், முன்னாள் ஊராட்சித்தலைவர் பரமசிவம் ஆகி யோர் முன்னிலை வகித்த னர். சிறுகமணி, வேளாண் அறிவியல் தலை வர் முனை வர் சகுந்தலை, வயல்களில் நடமாடும் தெளிப்பான்கள் கொண்டு நுண்ணீர் செயல்விளக்கத்தை நேரடியாக செய்து காண்பித்தார்.

கரும்பு ஆராய்சி நிலை யம் தலைவர் பேராசிரியர் பன்னீர்செல்வம் நெற்பயிர் கள் ஒருவார காலத்திற்கு வறட்சியை தாங்கி வளர்வதற்கு பொட்டாஷ் அல்லது மெத்தைலோட்ராப் என்ற பாக்ட்டீரியாவை தெளிப்பதன் மூலம் நெற்பயிர்கள் வறட்சியை தாங்கி வளரும என்பதை செயல்விளக்கத்துடன் கூறினார். திருந்திய நெல்சாகுபடி முறையில் நடவு செய்யப்பட்ட வயல்க ளில் கோனோ வீடர் மூலம் களை எடுப்பதை செயல்விளக்கத்துடன் உதவி இயக்குனர் மணிவண்ணன் செய்து காட்டினார்.

முன்னதாக வேளாண் அலுவலர் வீரமணி வரவேற்றார். துணை அலுவலர் ரபிக்ஜான் நன்றி கூறினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடு களை உதவி வேளாண்மை அலுவலர்கள் ராஜராஜன், ரகுபதி, செல்வம், ஆகியோர் செய்திருந்தனர்.

முகாமில் நஞ்சைசங்கேந்தி, புஞ்சைசங்கேந்தி, இருதயபுரம், வெள்ளனூர், புள்ளம்பாடி, பகுதி விவசாயிகள் திரளாக கலந்துகொண்டனர்.

## விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்ப கருத்தரங்கு

திருக்கோவிலூர், : திருக்கோவிலூர் அடுத்த சொரையப்பட்டு கிராமத்தில் முகையூர் வட்டார வேளாண்மை அலுவலகம் சார்பில் விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு குறித்த கருத்தரங்கு ஒன்றிய குழு தலைவர் துளசி ராஜா தலைமையில் நடந்தது. கருத்தரங்கில் வேளாண் மை உதவி இயக்குனர் கென்னடிஜெபக்குமார் பேசியதாவது:

பருவநிலை மாற்றங்கள், புவிவெப்பமாதல், அள வுக்கு அதிகமாக நிலத்தடி நீரின் பயன்பாடு, அதிகளவு ரசாயன பயன் பாடு போன்ற காரணங்களி னால் விவசாயிகள் பெரும் சவால்களை சந் தித்து வருகின்றனர். விவசாயத்தில் நவீன சாகுபடி தொழில்நுட்பங்கள் மற்றும் சாகுபடி முறைகளை கடைபிடிக்கும் விவசாயிகள் உற்பத்தியை அதிகரித்து வருவாயை ஈட்டி வருகின்றனர். சொரையப்பட்டு கிராமத் தில் முழு கிராம திருந்திய நெல்சாகுபடி திட்டத்தில் நடப் பாண்டு தேர்வு செய்யப் பட்டு சுமார் 200 ஏக் கரில் சம்பா பருவத்தில் திருந்திய நெல் சாகுபடி

செய்து பயி ரின் வளர்ச்சியும் நன்றாக உள்ளது. இந்த திருந்திய நெல் சாகுபடியில் பாசன நீர்த் தேவை 40-50 சதவிகிதம் குறைவதால் ஏரிப்பாசனத் தில் ஒரு போகம் சாகுபடி செய்திடும் கிராமங்களில் 2போகம் செய் திட வாய்ப்புள்ளது. இத னால் விவசாயிகள் வருமா னம் 2மடங்கு அதிகரிக்கும். இந்த நோக்கத்தின் அடிப்படையில் நீர் வளத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. புஞ்சை நிலங்களில் பாசன தேவையினை குறைத்திட கரும்பு, மணிலா, மக்காசோளம், மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு சொட்டுநீர் பாசனம், நீர்த்தூரிகள், போன்ற தொழில்நுட்பங்களின் உதவியுடன் வரு வாயை அதிகரித்திடலாம் என்றார்.

விவசாயிகளுக்கு ஒன் றிய குழு தலைவர் துளசி ராஜா களைஎடுக்கும் இயந்திரத்தை வழங்கினார். நிகழ்ச்சியில் வேளாண்மை அலுவலர்கள் புகழேந்தி, செந்தில்குமார், விதை அலு வலர் கிருஷ்ணன், செந்தில், ஆறுமுகம், வெங்கடகிருஷ்ணன், திருமலை, சிவக்குமார், ஒன்றிய கவுன்சிலர் மரியபிரகாசம், ஊராட்சி மன்ற தலைவர் கள் விஸ்வநாதன், அய்ய னார், ராஜ கோபால், ஜெகன், செல்வம், கண்ணாயிரம், நீர்பாசன சங்க தலைவர்கள் சண் முகம், சக்கர பாணி ஆகி யோர் கலந்து கொண் டனர்.

## வறண்ட கண்மாய்கள் வாடிய விவசாயிகள் பிழைப்பு தேடி கிராமத்தை விட்டு வெளியேறும் அவலம்

கமுதி, : கமுதி பகுதியில் போதிய அளவு மழை பெய்யாததால் கண்மாய்கள் தண்ணீரின்றி வறண்டு காணப்படுகிறது. கால்நடைகளுக்குக்கூட தண்ணீர் கிடைக்காத அவல நிலை ஏற்பட்டுள்ளதால் மக்கள் பிழைப்புத்தேடி நகர்புறங்களுக்கு செல்ல துவங்கி விட்டனர்.

கமுதி பகுதியில் ஏராளமான கண்மாய்கள் உள்ளன. இதை நம்பியே இந்த பகுதி விவசாயிகள் விவசாயம் செய்து வருகின்றனர். இந்நிலையில் இந்தாண்டு போதிய அளவு பருவமழை பெய்யாததால் விவசாயத்திற்கு போதுமான தண்ணீர் இல்லாமல் பயிர்கள் கருகி விவசாயம் பொய்த்துபோனது. கண்மாய்களை சரியான முறையில் தூர்வாரி பராமரிப்பு செய்யாததால் கண்மாயில் தண்ணீர் சேமிக்க முடியவில்லை. இதனால் கண்மாய்கள் விரைவிலேயே வறண்ட நிலைக்கு மாறிவிட்டன.

விவசாயிகள் இந்த கண்மாய்களை நம்பி கால்நடைகளும் வளர்த்து வருகின்றனர். கண்மாயில் தண்ணீர் இல்லாமல் வறண்டு விட்டதால் கால்நடைகளுக்குக்கூட குடிக்க தண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் கால்நடைகளை வளர்க்க முடியாமல் விவசாயிகள் குறைந்து விலைக்கு விற்கும் நிலைக்கு வந்துவிட்டனர். இதனால் அரசு வழங்கிய ஆடு, மாடுகளையும் விற்கும் அவல நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து இந்திய கம்யூனிஸ்ட் தாலுகா செயலாளர் குருநாதன் கூறுகையில், இந்தாண்டு இந்த பகுதியில் போதிய அளவு மழை பெய்யவில்லை. இதனால் கண்மாய்கள் வறண்டு விட்டன. மின்வெட்டு பிரச்னையால் இப்பகுதியில் விநியோக்கிக்கப்பட்டு வரும் காவிரி குடிநீரும் பல்வேறு கிராமங்களு வருவதில்லை. இதனால் தற்போது மக்கள் தண்ணீரை விலைக்கு வாங்கி குடிக்கின்றனர்.

இந்நிலையில் கால்நடைகளுக்கு தண்ணீர் கொடுக்க முடியவில்லை. இதனால் கால்நடைகளை குறைந்த விலைக்கு விற்று வருகின்றனர். சிலர் கால்நடைகளை விற்றுவிட்டு பிழைப்பு தேடி நகர்புறங்களுக்குச் செல்ல துவங்கிவிட்டனர். மக்கள் கிராமங்களை விட்டு வெளியேறாமல் இருக்க தமிழக அரசு மின்வெட்டு பிரச்னையை சரிசெய்து காவிரி குடிநீர் தடையின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

**வாய்க்கால்களில் நீர் வற்றுகிறது ஜெனரேட்டர் மூலம் பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சும் அவல நிலை**

சிதம்பரம், : வீராணம் வாய்க்கால்களில் நீர் வற்றி வருவதால் ஜெனரேட்டர் மூலம் தண்ணீரை இறைத்து பயிர்களுக்கு பாய்ச்சும் அவல நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் கூடுதல் செலவாகிறதென விவசாயிகள் குமுறலுடன் தெரிவிக்கின்றனர்.

சிதம்பரம் வட்டம் பெருங்காலூர், கண்ணங்குடி, சிவாயம், துரைப்பாடி சிறுகாலூர், நாஞ்சலூர், சி.தண்டேஸ்வரநல்லூர், துணிசிரமேடு, முகையூர், குமராட்சி ஒன்றியத்தை சேர்ந்த பரிவிளாகம், தெம்மூர், சிவக்கம் உள்ளிட்ட சுமார் 50க்கும் மேற்பட்ட கிராமத்தில் வீராணம் ஏரியை நம்பி விவசாயிகள் நேரடி நெல் விதைப்பும், நடவும் செய்துள்ளனர். பருவ மழை தவறியதாலும், வீராணம் ஏரியின் தண்ணீரை விவசாயத்திற்கு தராமல் சென்னைக்கு அனுப்பும் நோக்கோடு பொதுப்பணித்துறை அதிகாரிகள் செயல்பட்டதால் இப்பகுதியில் சுமார் 10 ஆயிரம் ஏக்கரில் பயிர் செய்யப்பட்டிருந்த சம்பா நெற்பயிர் கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தண்ணீர் இல்லாததால் பயிர் கருகி வருவதை கண்ட விவசாயிகள் மனவேதனை அடைந்துள்ளனர். பாசன வாய்க்கால், வடிகால் வாய்க்கால்களில் இருக்கும் குறைந்த அளவு தண்ணீரை ஜெனரேட்டர் மூலம் இறைத்து பெரிய டியூப்புகள் வழியாக விளை நிலங்களுக்கு கொண்டு சென்று பாய்ச்சு வருகின்றனர். வயல்களிலேயே கூடாரம் அமைத்து இரவுபகலாக தங்கி தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர்.

இதுகுறித்து அப்பகுதி விவசாயி ஒருவர் கூறுகையில், வருடாவருடம் இப்பகுதி வீராணம் ஏரி, பொன்னேரி ஆகியவற்றில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீர் மூலம் விவசாயம் செய்து

வந்தோம். இந்தாண்டு பருவமழை குறிப்பிட்ட நேரத்தில் பெய்யவில்லை. மேட்டூரிலிருந்து வீராணம் ஏரிக்கு வந்த தண்ணீரையும் பாசனத்திற்காக திறக்கவில்லை. இதனால் இந்த வருடம் விவசாயம் செய்யமுடியாத நிலை ஏற்பட்டு விடும் என்ற அஞ்சிய நாங்கள் நேரடி நெல் விதைப்பு செய்தோம்.

மழையும் சரியாக பெய்யவில்லை. பயிர் ஓரளவு வளர்ந்துள்ளது அதற்கு தேவையான தண்ணீரை எங்களால் கொடுக்க முடியவில்லை. வாய்க்கால்களில் கிடைக்கின்ற தண்ணீரை மோட்டார் மூலம் இறைத்து வயல்களுக்கு அனுப்பி வருகிறோம். இதன் மூலம் எங்களுக்கும் பொருட்செலவு அதிக அளவு ஏற்படுகிறது. தண்ணீரும் தொடர்ந்து கிடைக்காத நிலையும் உள்ளது. கடன் வாங்கியும், நகைகளை அடமானம் வைத்து விவசாயம் செய்த நாங்கள் கடனை திருப்பி செலுத்த முடியும் என்ற நிலையில் உள்ளோம் என்றார்.